** 497 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன்:* கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாவட்ட விசேஷக் கல்வி அதிகாரிகளின் கீழ் இயங்கி வரும் கழக உயர்நிலைப் பள்ளிகளை அரசாங்க பள்ளிகளாக ஆக்கும் திட்டம் ஏதேனும் இம்மாநில அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறதா?

(இ) ஆம் எனில், அத் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes.

(*b*) No decision has been taken so far.

* 498 *Q.*—SRI M. V. KARIVENGADAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there are any Municipalities that run schools exclusively for the students of Harijan and other backward communities; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) The Ramanathapuram Karaikudi and Vellore municipalities run schools exclusively for Harijans. Besides these, the Tiruvannamalai Municipality maintains schools near the Harijan colony catering to the needs of Harijan and other Backward Communities.

(*b*) (i) In Ramanathapuram, a school is located in Kuruvikara Street where Harijans are predominantly residing.

(ii) In Karaikudi, a residential school is maintained exclusively for Harijans and 31 students belonging to Harijan community are studying in the school.

(iii) In Vellore Municipality, two Junior Basic Schools are being run, one at Aruganthampundi and the other at Ambedakar Nagar.

(iv) The Tiruvannamalai Municipality maintains three schools located near the Harijan Colony.

புலவர் கா. கோவிந்தன்: தலைவர் அவர்களே, ஹரிஜன நலத் துறையில் புதிதாக ஆரம்பப் பள்ளிகள் துவக்கப்படக் கூடாது என்று அரசாங்கம் ஏதாவது உத்திரவு பிறப்பித்திருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அவ்வாறு ஒன்றும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

Students Hostels

499 *Q.*—SRI V. SANKARAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal under consideration of the Government to construct more hostels for College Students in the State; and

(*b*) if so, the details thereof?

12th November 1965]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) There is no proposal of a *general nature* for the construction of more hostels for College students in the State.

(*b*) Does not arise.

திரு. வை. சங்கரன் : ஸார், கல்லூரிகளில் இடம் கிடைத்தும் விடுதிகளில் இடம் கிடைக்காமல் மாணவர்கள் அவதிப்படுவதால் முக்கியமான நகரங்களிலாவது விடுதிகளை ஏற்படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கம் நிர்வகிக்கும் கல்லூரிகள் 13 ; 13-ல் 12 கல்லூரிகளுக்கு ஹாஸ்டல்கள் இருக்கின்றன. வட சென்னையில் அமைக்கப்பட்டிருக்கிற மகளிர் கல்லூரிக்குத்தான் ஹாஸ்டல் இல்லை. அங்கு ஹாஸ்டல் அவ்வளவு அவசியம் என்று உணரப்படவில்லை.

திரு. வை. சங்கரன் : ஸார், சர்க்கார் கல்லூரிகளைப் பற்றி மட்டும் நான் சொல்லவில்லை. நகரத்தில் இருக்கிற கல்லூரி மாணவர்களுக்கு விடுதிகளில் இடம் கிடைக்காததால் போதுமான அளவுக்கு ஹாஸ்டல்கள் கட்ட சர்க்காருக்கு உத்தேசம் இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது கல்லூரி நடத்துகிறவர்கள் கவனிக்க வேண்டிய விஷயம். இதற்கு உதவியும் அளிக்கப்படுகிறது. மத்திய சர்க்கார் அளிக்கிறது, யுனிவர்சிட்டி கிராண்ட்ஸ் கமிஷன் அளிக்கிறது. இந்த அரசாங்கத்திலிருந்து அளிக்கப்படுகிறது. அந்த நிதியை மாத்திரம் வைத்துக் கொண்டு கட்ட முடியாது. இதையும் வைத்துக்கொண்டு, அவர்களும் கொஞ்சம் செலவு செய்து கட்ட வேண்டும்.

திரு. எஸ். முருகையன் : சர்க்கார் நடத்தும் விடுதிகளில் போதுமான மாணவர்களுக்கு வசதி செய்யப்படுகிறதா ? பலர் இடம் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. வேண்டிய அளவுக்கு இட வசதி அளிக்க சர்க்கார் அதற்கான ஏற்பாடுகளைச் செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எல்லோருக்கும் வசதி அளித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. எவ்வளவு தூரம் இதற்கு நிதியைப் பயன்படுத்த முடியுமோ அந்த அளவுக்குக் கட்டப்பட்டிருக்கின்றன.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, மவுண்ட் ரோடில் உள்ள கலைக் கல்லூரியில் விடுதியானது சிறிய அளவில்தான் இருக்கிறது. 60-70 பேர்களுக்கு மேல் இருக்க இடம் இல்லை. இதை மேலும் விரிவாக்க உத்தேசம் இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது அவ்வாறு உத்தேசம் இல்லை. இது பின்னால் கவனிக்க வேண்டிய விஷயம்.

[12th November 1965

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : இப்போது நம் கிராமப் புறங்களிலெல்லாம் உயர்நிலைப் பள்ளிகளை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறோம். பள்ளிகளுக்கு 4-5 மைல் தூரம்கூட குழந்தைகள் நடந்து வரும் நிலைமை இருக்கிறது. கிராமத்தில் இருக்கிற ஹைஸ்கூல்களிலேயும் ஹாஸ்டல்கள் நிறுவ அரசாங்கம் உத்தேசிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தக் கேள்வி கல்லூரிகள் பற்றியது. உயர்நிலைப் பள்ளிகள் ஏராளமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. முதலில் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்ட வேண்டும். ஹாஸ்டல்களுக்கு அவ்வளவு அவசியம் இல்லை என்றுதான் சொல்லுவேன்.

Training in English Language

* 500 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal before the Government to raise the standard of teaching and learning of English Language in all classes in Schools and Pre-University Courses in Colleges ; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) : The Government have introduced teaching of " English " from Standard III in all schools. Pilot courses in the modern methods of English teaching for Standards III to VIII have been introduced and have been successful. As far as teaching and learning of English courses in Pre-University courses in Colleges is concerned, it is a matter to be considered by the University.

திரு. வை. சங்கரன் : மாணவர்களுடைய தரத்தை உயர்த்துவது மட்டுமல்லாது இப்பொழுது ஆங்கிலம் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர்களுக்கும் ரிப்ரெஷர் கோர்ஸ் மாதிரி நடத்த அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எவ்வளவு தூரம் அவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டுமோ அது கவனிக்கப்பட்டு வருகிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஆசிரியர்களுக்கு ஆன ஆங்கில மொழி பயிற்சியை அதிகரிக்கும் முறையில் பிரிட்டிஷ் கவுன்சில் ஏதாவது உதவி செய்கிறார்களா ? எந்த விதத்தில் உதவி செய்கிறார்கள் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பெரிதும் உதவி செய்கிறார்கள். அவர்களுடைய ஆசிரியர்களை அளிக்கிறார்கள். அவர்கள் உதவியை அதிகமாகப் பயன்படுத்திக் கொண்டு வருவது இந்த மாநில அரசாங்கம் தான்.

திரு. வை. சங்கரன் : பொதுவாக ஆங்கிலப் பாடத்தை எடுத்துக் கொண்டால் நோட்ஸை மட்டும் வைத்துக்கொண்டு மனப்பாடம் செய்து விடுகிறார்கள் ; எக்ஸ்ட்ரா ரீடிங் இல்லாததால் தரம் இல்லை